இயல் ஒன்று

# இன்பத்தமிழ்

நுழையும்முன்

நமது தாய்மொழியாகிய தமிழைத் தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. தமிழ் வணக்கம் தற்கால இலக்கிய மரபாக ஆகிவிட்டது. பாரதிதாசன் தமிழைப் பலவாறாகப் போற்றுகிறார். கண்ணே! மணியே! என்று குழந்தையைச் செல்லமாகக் கொஞ்சுவதும் உண்டு. அதுபோல அவர் நம் செந்தமிழுக்குப் பெயர்கள் பல சூட்டி மகிழ்வதைக் காண்போம்.

*தமிழுக்கும் அமுதென்று பேர்! – அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!* *

*தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்*
*தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!* *

*தமிழுக்கு மணமென்று பேர்! – இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!* *

*தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! – இன்பத்*
*தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!*

*தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்*
*தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!*

*தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! – இன்பத்*
*தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!*

*– பாரதிதாசன்*

### சொல்லும் பொருளும்

நிருமித்த – உருவாக்கிய
சமூகம் – மக்கள் குழு
விளைவு – வளர்ச்சி
அசதி – சோர்வு



6th Std-Tamil_2025_Term_I_Unit1.indd 2 23/01/2025 17:08:32